**Logopädischer Dienst**

# பிள்ளைகளின் மொழி வளர்ச்சியும் அதற்கான ஊக்குவிப்பும்

## மொழிஅறிவு பெறுவதற்கான அடிப்படைச் செயற்பாடு

மொழியறிவு வளர்ச்சி என்பது மொழியைப் பற்றிய அறிவு வளர்ச்சியை விட அதிகமானது. அத்துடன் அது பார்த்தல், கேட்டல், தொடுதல் போன்ற புலனங்கங்களின் வளர்ச்சியுடனும், செயற்திறன், அறிவுரீதியான திறமை, உணர்வுரீதியானதும் சமூகரீதியானதுமான செயற்பாடுகள் போன்றவற்றுடனும் தொடர்புடையது. இவ் அனைத்திலுமான வளர்ச்சியை கவனிப்பது மொழியறிவு வளர்ச்சிக்கு உதவும். உணரும்திறனிலும் செயற்திறனிலும் அடிப்படையான படிப்படியான வளர்ச்சி மொழியறிவு உருவாவதற்கு முன்பாக நிகழும்.

### மொழிஅறிவை ஊக்குவிப்பதற்கான அடிப்படை

மொழியறிவு வளர்ச்சி பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையேயான உறவினாலும் உருவாகும். உங்கள் பிள்ளையின் கருத்துக்களை கவனத்தில் எடுக்கவும். கூறுவதனை கேட்கவும். இயல்பாக கதைக்கவும்.
மொழியறிவு வளர்ச்சிக்கு உதவும் வகையில் பேசவும். உங்கள் பிள்ளையின் மொழியறிவு வளர்ச்சிக்கு கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உதவும்.

- பார்வைத்தொடர்பு — இதனால் உங்கள் பிள்ளை தன்னை கவனிப்பதாக உணரும்.
- அக்கறையை காண்பித்தல் — பிள்ளைக்காக நேரத்தை ஒதுக்கி அதை பேச விடவும். உங்களுக்கு தன்னில் அக்கறை உள்ளதாக பிள்ளை உணரும்.
- ஆர்வமாக கேட்டல் — உரையாடலில் ஆர்வமாக இருக்கவும். கேள்விகளும் கேட்கவும்.
- உண்மையான பங்களிப்பு — பிள்ளையின் தேவையை கவனத்தில் எடுக்கவும். பிள்ளைக்கு அன்பு, பாசம், அரவணைப்பு கொடுக்கவும்.

## காலம் தாழ்த்திய மொழி வளர்ச்சிக்கான அறிகுறிகள்

1. வயது ( 0-12 மாதங்கள்)
   பிள்ளை சத்தமிடுவது குறைவாக இருக்கும். மௌனமாக இருக்கும். சத்தங்களை உணராதிருக்கும். பார்வைத்தொடர்பு இருக்காது.

2. வயது (13-24 மாதங்கள்)
   பிள்ளை ஒரு சொல்லும் பேசாதிருக்கும். முகம் கைகள் என்பனவற்றின் செய்கைகளினால் தொடர்பு கொள்ளும். விளங்கிக்கொள்வதில்லை. ஏற்கனவே அறிந்து கொண்டவை வளர்ச்சியடைவதில்லை அல்லது குறைவடையும்.

3. வயது (25-36 மாதங்கள்)

பிள்ளை மிகவும் குறைந்த சொற்களை பேசும். (50 சொற்களை விட குறைவு) அனேகமாக பேச்சு தெளிவற்று இருக்கும். இரு சொற்கள் கொண்ட வசனங்களை பேசாது.

4. வயது (37-48 மாதங்கள்)

பிள்ளை குறைந்தளவு கேள்விகளே கேட்கும், தனக்கு தெரியாதவர்களுடன் தெளிவின்றி பேசும், வசனங்களை உருவாக்காது, பன்மை இருக்காது, குறைவான வினைச்சொற்களை பயன்படுத்தும், உருபுகள் அல்லது பெயர்எச்சங்கள் இருக்காது. 3வயதில் 100 சொற்களை விட குறைவாக தெரிந்திருக்கும்.

5. வயது (49-60 மாதங்கள்)

வசனங்கள் அமைப்பதில் சிரமம் இருக்கும். இலக்கணப் பிழையான வசனங்களாக இருக்கும். பேசுவது எப்போதும் தெளிவாக இருக்காது. இலகுவான விடயங்கள் ஞாபகத்தில் இருக்காது.

## மொழியறிவில் உள்ள இடையூறுகள்

- உச்சரிப்பதில் இடையூறுகள் (டியஸ்லலியே)
- சொற்களும் வசனங்களும் அமைப்பதில் உள்ள இடையூறுகள் (டியஸ்கிறமற்றீஸ்முஸ்)
- மட்டுப்படுத்தப்பட்ட சொல்லாட்சி
- மட்டுப்படுத்தப்பட்ட விளங்கிக்கொள்ளும் தன்மை
- மொழியை அறிந்துகொள்வதில் உள்ள அனைத்து விதமான இடையூறுகள்
- உரையாடுவதில் உள்ள இடையூறுகள்: திக்கிப்பேசுதல், பேசுவதில் சிரமம்
- மயோசெயற்பாட்டு இடையூறு (தசைகள் மூலமாக உடற்சமநிலை பேணுவதில் சிரமம்)
- முற்றிஸ்முஸ் (மனோரீதியான மௌனம்)

## மொழியறிவு வளர்ச்சியை ஊக்குவித்தல்

- முன்உதாரணமாக பேசிக்காட்டுங்கள்: ஆறுதலாக தெளிவாக பேசுங்கள், ஆனால் மழலைமொழி பேசாதீர்கள்.
- நாளாந்த செயற்பாடுகளை பிள்ளையுடன் சேர்ந்து கதைப்பதன் மூலம் செய்வதாக வளர்ப்புமுறை இருத்தல் வேண்டும். (உ-ம் ஆடை அணியும் போது சமைக்கும் போது).
- ஒரே வயதுள்ள பிள்ளைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி கொடுங்கள்.
- உச்சரிப்பு இலக்கணம் சொல்லாட்சி என்பனவற்றை திருத்தி திருப்பி கூறுவதன் மூலம் சரிப்படுத்துங்கள்.
- பாடல்கள், சொற்கட்டுகள், விரல்விளையாட்டுகள் மூலம் பேசுவதில் மகிழ்ச்சி ஏற்பட ஊக்கப்படுத்துங்கள்.
- நாளாந்த செயற்பாடுகளை சொல் விளையாட்டு அல்லது பாடல்களுடன் இணைந்து செய்யவும். (உ-ம் ஆடை மாற்றும் போது விளையாட்டு, குளிக்கும் போது பாடல்).

**Logopädischer Dienst Glarus**
Burgstrasse 30
8750 Glarus
www.gemeinde.glarus.ch

Astrid Rudolf Flach
Logopädin
Tel: 058 611 80 63
astrid.rudolf@glarus.ch

Holger Uhlig
Logopäde
Tel: 058 611 80 64
holger.uhlig@glarus.ch